

# நான் வுழூச் செய்வது எவ்வாறு?

வுழூ முறை பற்றிய தெளிவான விளக்கமும் அம் மகத்தான கிரியையோடு கூடிய சில தெளிவுகளும்

# நான் வுழூச் செய்வது எவ்வாறு?

வுழூ முறை பற்றிய தெளிவான விளக்கமும் அம் மகத்தான கிரியையோடு கூடிய சில தெளிவுகளும்

OsoulCenter
www.osoulcenter.com

ح جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة ، ١٤٤٥ هـ

**مركز أصول**

سلسلة يومي الأول في الإسلام (١): كيف أتوضأ: شرح مصور لكيفية الوضوء مع وقفات مع هذه الشعيرة العظيمة باللغة التاميلية. / مركز اصول - ط ١. .- الرياض ، ١٤٤٥ هـ

٤٨ ص ؛ ١٤.٨ x ٢١ سم

**رقم الإيداع: ١٤٤٥/٢٥٠٨٩**

**ردمك: ٩٧٨-٦٠٣-٨٤٣٨-٦٢-٦**

Osoul Center
www.osoulcenter.com

■ இந்நிறுவனம் இவ்வெளியீட்டைத் தயாரித்து, வடிவமைத்துள்ளது

■ எவ்வித மாற்றங்களும் செய்யாமல், பெற்றுக் கொண்ட இடத்தை சுட்டிக்காட்டும் நிபந்தனையுடன் எவ்வழியிலும் இவ்வெளியீட்டை அச்சிட்டு விநியோகிக்க இந்நிறுவனம் அனுமதிக்கின்றது

■ அச்சிடும் போது உஸூல் நிறுவனம் சார்ந்திருக்கும் தர நிலையைப் பற்றிப்பிடிப்பது அவசியமாகும்

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளனும் நிகரற்ற
அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால்
(ஆரம்பிக்கிறேன்)



# முகவுரை

உலகைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும். சாந்தியும் சமாதானமும் எமது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அன்னாரது கிளையார், தோழர் அனைவர் மீதும் உண்டாவதாக.

இஸ்லாம் சுத்தத்தின் மார்க்கமாகும். அதாவது உடல், உடை, இடம் ஆகியன அசுத்தத்திலிருந்து சுத்தமாகுதல், பாவங்கள், தீழ்த்தரமான குணங்கள், மோசமான நோக்கங்களை விட்டும் ஆன்மாக்கள் சுத்தமாகுதல் என்பதை அது குறிக்கிறது.

பல சந்தர்ப்பங்களில் அல்லாஹ் ஒரு முஸ்லிமுக்கு சுத்தத்தை விதியாக்கியுள்ளான். இஸ்லாத்தின் தூணாகிய மற்றும் ஓர் அடியானுக்கும் அவனது இரட்சகனுக்கும் இடையிலான மகத்தான தொடர்பாகிய தொழுகைக்காக செய்யும் வுழூவும் அதிலுள்ளவையாகும்.

அதான் கூறுதல், அழகிய ஆடையணிதல் போன்ற கண்ணியமிக்க முன்னேற்பாடுகிளை அல்லாஹ் தொழுகைக்காக வைத்திருப்பது அதன் மகத்துவங்களில் உள்ளதாகும். வுழூ, குளிப்பு, தயம்மும் மூலம் சுத்தமாகுவதும் அவற்றில் உள்ளவையாகும்.



அல்லாஹ் கூறுகிறான் : "நம்பிக்கையாளர்களே! நீங்கள் தொழுகைக்குச் சென்றால் (அதற்கு முன்னர்) உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் கைகளையும், கணுக்கால்கள் வரை உங்கள் இரு பாதங்களையும் கழுவிக்கொள்ளுங்கள். (உங்கள் கையில் நீரைத் தொட்டு) உங்கள் தலையை(த் தடவி) 'மஸ்ஹு' செய்துகொள்ளுங்கள். நீங்கள் முழுக்குடையவர்களாக இருந்தால் (கை கால்களை மட்டும் கழுவினால் போதாது. உடல் முழுவதையும் கழுவி) தூய்மையாக்கிக் கொள்ளுங்கள். அன்றி, நீங்கள் நோயாளிகளாக இருந்தால் அல்லது பயணத்தில் இருந்தால் அல்லது உங்களில் எவரும் மலசல கூடத்திற்குச் சென்று வந்திருந்தால் அல்லது நீங்கள் பெண்களைத் தீண்டியிருந்தால், (தொழுகையின் நேரம் வந்து உங்களைச் சுத்தம் செய்து கொள்வதற்கு வேண்டிய) தண்ணீரை நீங்கள் பெறவில்லையெனில் (தயம்மும் செய்து கொள்ளுங்கள். அதாவது) சுத்தமான மண்ணை (உங்கள் கைகளால் தொட்டு அதை)க்கொண்டு உங்கள் முகங்களையும், கைகளையும் துடைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்குக் கஷ்டத்தைத் தர அல்லாஹ் விரும்பவில்லை. எனினும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காக அவன் உங்களைப் பரிசுத்தமாக்கி வைக்கவும், தன் அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கி வைக்கவுமே விரும்புகிறான்". (ஸூரா மாஇதா : 6).

நபி (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள் : "உங்களில் ஒருவருக்கு தொடக்கு ஏற்பட்டால் அவர் வுழூச் செய்யும் வரை அவரது தொழுகையை அல்லாஹ் ஏற்க மாட்டான்". (புஹாரி, முஸ்லிம்)

வுழூவிற்குப் பல சிறப்புக்கள் உள்ளன : அது ஈமானின் பாதியாகும், அதன் மூலம் அல்லாஹ் பாவங்களை மன்னித்து, அந்தஸ்துக்களை உயர்த்துகின்றான், அது சுவனத்தின் பாதையாகும், மறுமையில் முஸ்லிமுக்கு ஒளியாகும். அதன் மூலமே ஷைதான் போட்ட முடிச்சுகள் அவிழ்க்கப்படுகின்றன. அது மறுமை நாளில் இந்த சமூகத்தின் தனி அடையாளமாகும். வுழூவின் தடங்களாக முகங்கள், கை, கால்கள் மின்னியவர்களாக, பிரகாசத்துடனேயே மறுமையில் அவர்கள் வருவார்கள்.

நபி (ஸல்) கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) கூறுகின்றார்கள் : "ஒரு முஸ்லிம் அடியான் அல்லது ஒரு விசுவாசி வுழூ செய்யும் போது அவன் தனது முகத்தைக் கழுவியதும் அந்தத் தண்ணீருடன் அல்லது இறுதித் துளி தண்ணீருடன் அவன் தன் இரு கண்களாலும் பார்த்த தவறுகள் யாவும் வெளியேறி விடும். மேலும் அவன் தன் இரு கைகளையும் கழுவியதும் அவனின் இரண்டு கரங்களும் தொட்ட பாவங்கள் யாவும் அந்தத் தண்ணீருடன் அல்லது இறுதித் துளி தண்ணீருடன் அதனை விட்டும் வெளியேறி விடும். மேலும் அவன் தனது இரண்டு கால்களையும் கழுவியதும் அவனின் இரண்டு கால்களும் நடந்து சென்று செய்த பாவங்கள் யாவும் அந்தத் தண்ணீருடன் அல்லது இறுதித் துளி தண்ணீருடன் வெளியேறி விடும். ஈற்றில் அவன் சகல பாவங்களை விட்டும் தூய்மையாக வெளியேறி விடுவான்". (முஸ்லிம்)

நபி (ஸல்) கூறியதாக அபூ ஹுரைரா (ரலி) கூறுகின்றார்கள் : "நிச்சயமாக என்னுடைய சமுதாயத்தவர்கள் மறுமை நாளில் உளூவின் சுவடுகளால் முகம், கை கால்கள் ஒளிமயமானவர்களாக வருவார்கள்". (புஹாரி, முஸ்லிம்)



# பொருளடக்கம்

| தலைப்பு | | பக்க இலக்கம் |
|---|---|---|
| 1 | இஸ்லாத்தில் சுத்தம் | 11 |
| 2 | தொழுகைக்கு வேண்டப்படும் சுத்தம் | 13 |
| 3 | பெண்ணிற்குக் குறிப்பான சட்டங்கள் | 17 |
| 4 | இயற்கை தேவைகளை நிறைவேற்றுவதன் ஒழுங்குகள் | 19 |
| 5 | வுழூச் செய்வது எவ்வாறு? | 23 |
| 6 | ஜனாபத்திற்காகக் குளிப்பது எவ்வாறு? | 34 |
| 7 | சுத்தத்தின் பிரத்தியேக நிலைகள் | 35 |
| 8 | மதிப்பீட்டு வினாக்கள் | 40 |



# இஸ்லாத்தில் சுத்தம் :

இஸ்லாத்தில் சுத்தமானது ஆழமானதும் பெறுமதிமிக்கதாகவுமுள்ளது. அது தண்ணீரால் சுத்தப்படுத்தும் வெளிப்படையான சுத்தத்துடன் சுருங்கிக் கொள்ளவில்லை. மாறாக மறைமுகமானதோ, புலப்படக் கூடியதோ அனைத்து வித அசுத்தங்களை விட்டும் சுத்தமாகுவதே இதன் அர்த்தமாகும்.

உள்ரங்கமான சுத்தம் என்பது அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், தவறான சித்தாந்தங்கள், மூட நம்பிக்கைகள் போன்றவற்றை விட்டும் உள்ளத்தை சுத்தப்படுத்துவதுடன், பொறாமை, வஞ்சகம், முஸ்லிம்களைப் பற்றிய தவறான எண்ணம், மோசடி, உலோபித்தனம், ஏமாற்று போன்ற தீய குணங்களை விட்டும் அதனை சுத்தப்படுத்துவதாகும்.

வெளிப்படையான சுத்தம் என்பது அசுத்தங்களிலிருந்தும், தொழுகை போன்ற சில வணக்கங்களை மேற்கொள்வதை விட்டும் தடுக்கும் பண்புகளிலிருந்தும் சுத்தமாவதாகும். இந்தத் தடைப்பண்புக்கு தொடக்கு என இஸ்லாமிய சட்டக்கலையில் கூறப்படுகின்றது. இது சிறு தொடக்காக இருந்தால் வுழூ அல்லது தயம்மும் மூலமும், பெருந்தொடக்காக இருந்தால் குளிப்பு அல்லது தயம்மும் மூலமும் நீங்குகின்றது.



# தொழுகைக்கு வேண்டப்படும் சுத்தம் :

தொழுகை என்பது ஓர் அடியானுக்கும் அவனது இரட்சகனுக்கும் இடையில் நடைபெறும் இரகசிய உரையாடலாகும். எனவே ஒரு முஸ்லிம் தனது இரட்சகன் முன்னிலையில் நிற்கும் போது அழகிய தோற்றத்திலும், உள்ளச்சம், தூய்மை, சுத்தத்தில் சிறந்த நிலையிலும் இருக்க வேண்டும். இதனால்தான் ஒரு முஸ்லிம் தொழும் போது தனது உடல், உடை, தொழுமிடம் ஆகியவற்றில் அனைத்துவித அசுத்தங்கள் மற்றும் தொடக்குகளிலிருந்து சுத்தமாவதை அவன் மீது கடமையாக்கியுள்ளான்.



## தொழுபவர் சுத்தமடைய வேண்டிய விடயங்கள் :

சிறு தொடக்கு, பெருந்தொடக்கு, அசுத்தம் ஆகியவற்றிலிருந்து தொழுபவர் தனது தொழுகைக்கு முன் சுத்தமாவது அவசியமாகும். அதன் விபரம் வருமாறு :

தொடக்கு : இது உடலில் ஏற்படக்கூடிய தொழுகையைத் தடுக்கும் மறைமுகமான ஒரு பண்பாகும். இது இரு வகைப்படுகின்றது :

1. சிறு தொடக்கு : சிறுநீர், மலம், காற்று வெளியாவதன் மூலமோ, உறக்கத்தின் மூலமோ இது ஏற்படுகின்றது. வுழூச் செய்வதன் மூலம் இது நீங்கிவிடுகின்றது.

2. பெருந்தொடக்கு : இதற்கு ஜனாபத்து எனப்படுகின்றது. இது உடலுறவு, விந்து வெளிப்படல் மூலம் ஏற்படுகின்றது. உடல் முழுதும் நனையும் விதத்தில் குளிப்பதன் மூலம் இது நீங்குகின்றது.

அசுத்தம் என்பது சிறுநீர், மலம், ஒட்டப்பட்ட இரத்தம் போன்ற வெளிப்படையான அசுத்தங்களாகும். நீரினால் அது நீங்கும் வரை கழுவுவதன் மூலம் அது சென்று விடும்.

சிறுநீர் வெளிப்படுவதற்கு தொடக்கு எனக் கூறப்படும், அதேவேளை அச்சிறுநீர் அசுத்தம் எனப்படுகின்றது.

அனைத்து வித தொடக்குகள், அசுத்தங்களிலிருந்து தொழுபவர் தூய்மையடைந்தவராக இருத்தல் அவசியமாகும்.

- எனவே சிறுதொடக்குள்ளவராக இருந்தால் வுழூச் செய்ய வேண்டும்.
- பெருந்தொடக்குள்ளவராக இருந்தால் குளிக்க வேண்டும்.

அத்துடன் தொழுபவர் வெளிப்படையான அசுத்தங்களிலிருந்து மூன்று விடயங்களை சுத்தப்படுத்த வேண்டும் :





# பெண்ணிற்குக் குறிப்பான சட்டங்கள் :

சுத்தத்தின் சட்டங்களில் பெண்ணும் ஆணைப் போன்றுதான். என்றாலும் மாதவிடாய், கருத்தரித்தல், பிரசவித்தல் போன்றன மூலம் அவளை அல்லாஹ் தனித்துவப்படுத்தியுள்ளான். அது புவியைப் பரிபாலிப்பதில் மனித இனம் தொடர்திருக்க அவன் வைத்துள்ள நியதியிலுள்ளதாகும். இஸ்லாமிய சட்டம் அவளுடைய உடல், உளவியல் அமைப்பைக் கருத்திற் கொண்டு, மாதவிடாய், பிரசவ இரத்தம் ஏற்படும் நேரங்களில் தொழுகையைத் தளர்த்தியுள்ளது. அதன்படி அவ்விருநிலைகளிலும் அவளுக்கு தூய்மையடைதலோ, தொழுகையோ கடமையில்லை. மாதவிடாய் அல்லது பிரசவ இரத்தம் நின்று விட்டால் மாத்திரமே அவள் மீது குளிப்பு கடமையாகிறது.

ஒரு பெண் தனது முடியை பின்னி வைத்திருந்தால் தலைக்கும், அனைத்து முடிகளுக்கும் நீர் படும் பட்சத்தில் ஜனாபத்து, மாதவிடாய், பிரசவ இரத்தம் என்பவற்றிலிருந்து குளிக்கும் போது அப்பின்னல்களை அவிழ்க்க வேண்டியதில்லை.





# இயற்கை தேவைகளை நிறைவேற்றுவதன் ஒழுங்குகள்:

விலங்குகளின் வாழ்க்கையை விட்டும் வேறுபட்ட, உயர்ந்த வாழ்க்கையாக அமைய இஸ்லாம் முஸ்லிமின் வாழ்க்கையை ஒழுங்குபடுத்தியுள்ளது. அனைத்து மானிடர்களுக்கும் இன்றியமையாத இயற்கைத் தேவையை நிறைவேற்றுவது போன்ற இஸ்லாத்தைப் பற்றி அறியாதோரின் கற்பனைக்கு எட்டாத விடயங்களைக் கூட நெறிப்படுத்தியுள்ளது.

## இஸ்லாத்தில் இயற்கைத் தேவையை நிறைவேற்றும் போது கடைப்பிடிங்க வேண்டிய ஒழுங்குகள் :

- இயற்கைத் தேவையை நிறைவேற்ற மலசலகூடத்திற்குச் செல்லும் போது இடது காலை முற்படுத்தி பின்வரும் துஆவை ஓதுவது ஸுன்னத்தாகும் : "அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மினல் குப்ஸி வல் கபாஇஸ்". (பொருள் : யாஅல்லாஹ் ! ஆண் பெண் ஷைத்தான்களை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்).

- வெளியேறும் போது வலது காலை முற்படுத்தி பின்வரும் துஆவை ஓத வேண்டும் : 'குஃப்ரானக' (இறைவா! என்னை மன்னிப்பாயாக!).

- மலசலம் கழிக்கும் போது கிப்லாத் திசையை முன்னோக்கவோ, பின்னோக்கவோ கூடாது. மறைக்கக்கூடிய சுவரேதுமில்லாத வெட்டவெளிப் பகுதியில் இதனைப் பேணுவது அவசியமாகும்.

- மலசலகூடத்தினுள்ளோ, வெளியிலோ மலசலம் கழிக்கும் போது மக்கள் பார்வையை விட்டும் தனது மறைவிடத்தை மறைத்துக் கொள்ளுதல்.

- பாதையோரங்கள், மக்கள் அமரும் இடங்கள், அவர்களை நோவினைப் படுத்தும் இடங்களில் மலசலம் கழித்தலாகாது.

- தேங்கி நிற்கும் நீரில் மலசலம் கழித்தலாகாது.

- பிராணிகளின் பொந்துகள் போன்றவற்றில் மலசலம் கழித்தலாகாது.

- தனது உடை, உடலில் சிறுநீர் தெறிக்காமலிருப்பதில் கவனம் செலுத்துதல்.

- இஸ்தின்ஜாவின் (முன்,பின் துவாரத்தை நீரினால் கழுவுதல்) போதோ, இஸ்திஜ்மாரின் (முன்பின் துவாரத்தை கல், திஷூக்கள் போன்றவற்றால் துடைத்தல்) போதோ சுத்தம் செய்யும் போது இடது கரத்தைப் பயன்படுத்துதல்.

இஸ்தின்ஜா, இஸ்திஜ்மார் இரண்டையும் சேர்த்தும் சுத்தம் செய்யலாம், இரண்டில் ஒன்றுடன் மாத்திரம் சுருக்கிக் கொள்ளவும் முடியும், இது இஸ்லாத்தின் இலகுபடுத்தல் கொள்கையில் உள்ளதாகும்.



ஒரு முஸ்லிம் தனது தனிப்பட்ட தூய்மையில் கவனம் செலுத்துமாறு இஸ்லாம் வழிகாட்டுகின்றது. மலசலம் கழித்த பின் தண்ணீர் மற்றும் முடியுமான சுத்தப்படுத்தும் உபகரணங்களைப் பயன்படுத்தி இரு கரங்களையும் கழுவி சுத்தம் செய்வதும் அதிலுள்ளதாகும்.



# வுழூச் செய்வது எவ்வாறு?

வுழூச் செய்யும் முறை பற்றிய விவரணப்படங்களுடன் கூடிய செயன்முறை விளக்கம்

வுழூச் செய்ய முன் ஒரு முஸ்லிம் பின்வருவனவற்றை அறிந்து கொள்வது முக்கியமாகும்:

- எண்ணமின்றி வுழூ இல்லை, உளத்தூய்மை இன்றி எண்ணமில்லை, எண்ண வேண்டிய இடம் நாவன்றி இதமாயகும்.

- ஓர் உறுப்புக்கு முன் மற்ற உறுப்பை முற்படுத்தாமல், தாமதகிக்காமல் இருக்கும் விதத்தில் வுழூவின் உறுப்புகளுக்கிடையே ஒழுங்கு முறை அவசியமாகும். அவற்றைத் தொடராகச் செய்வதும் அவசியமாகும்.

பார்கோடை ஸ்கேன் செய்வதன் மூலம், எப்படி வுழூச் செய்வது என்பது பற்றிய முழுமையான கல்வித் தகவலைப் பார்க்கவும்.



1 நிய்யத் (எண்ணம்) : தொடக்கை நீக்குவதற்காக வுழூச் செய்வதாக எண்ணிக் கொள்ள வேண்டும். (நாவினால் மொழியாமல் உள்ளத்தினால் எண்ண வேண்டும்.) வணக்கம் என்ற நிய்யத் இன்றி வெறுமனே தனது உடலுறுப்புக்களை கழுவுவதாக எண்ணினால் வுழூ நிறைவேற மாட்டாது. இதனை அல்லாஹ்வுக்குத் தூய்மையாக நிறைவேற்ற வேண்டும்.



2 வுழூவின் ஆரம்பத்தில் "பிஸ்மில்லாஹ்" கூற வேண்டும், அதன் மூலமே வுழூவை ஆரம்பிக்கின்றோம். பின் வாயைச் சுத்தம் செய்வதற்காக முடியுமாயிருந்தால் மிஸ்வாக் செய்ய (பல் துலக்குதல்) வேண்டும்.



3

இரு கைகளையும் விரல் நுனியில் இருந்து மணிக்கட்டு வரை நீரால் மூன்று முறை கழுவ வேண்டும்.

4

வாய்கொப்பளித்தல், மூக்கினுள் நீர் செலுத்தி, சிந்தி விடுதல் :

- வாய்கொப்பளித்தல் என்பது வாயினுள் நீரை வைத்து உள்ளே அதிகமாக கடப்புச் செய்து விட்டு உமிழ வேண்டும்.
- மூக்கினுள் நீர் செலுத்துதல் என்பது வலது கரத்தால் நீரை எடுத்து மூக்கு வரை மூச்சை இழுப்பதன் மூலம் உரிந்து எடுத்தல்.





- சிந்து விடுதல் என்பது மூச்செடுப்பதன் மூலம் மூக்கிலிருந்து இடது கரத்தைப் பயன்படுத்தி நீரை சிந்துதல்.

- நோன்பாளிகளாக இல்லாத பட்சத்தில் வாய்கொப்பளித்தல், மூக்கினுள் நீர் செலுத்துதல் என்பவற்றை சற்று அதிகம் செய்வது ஸுன்னாவாகும்.

- வாய்கொப்பளித்து, மூக்கினுள் நீர் செலுத்துவதற்கு இரு முறைகள் உள்ளன :

  - சேர்த்து செய்தல் : ஒரு அள்ளு நீர் எடுத்து பாதியால் வாய் கொப்பளித்து, மறுபாதியால் மூக்கினுள் நீர் செலுத்துதல். இவ்வாறு மூன்று அள்ளுக்கள் நீர் எடுத்து மூன்று தடவை செய்ய வேண்டும்.

  - பிரித்து செய்தல் : வாய்கொப்பளிக்கத் தனியாகவும், மூக்கினுள் நீர் செலுத்த தனியாகவும் வெவ்வேறு அள்ளு நீர் எடுத்து, அவ்வாறு மும்மூன்று தடவைகள் செய்ய வேண்டும்.



5 முகம் கழுவுதல் : உயரத்தால் முகத்தின் வரையறை : நெற்றியில் முடி முளைக்கும் இடத்திலிருந்து நாடிக்குழி வரை, மற்றும் அகலத்தால் ஒரு காது முதல் மறு காது வரை.







அடர்த்தியில்லாத தாடி, மீசை, கண் புருவம், இமை, கீழுதட்டிற்குக் கீழுள்ள முடி போன்ற முகத்திலுள்ள அனைத்து முடிகளையும் கழுவுதல் அவசியமாகும்.

6

இரு கைகளையும் கழுவுதல் : வலது கையை விரல் நுனியிலிருந்து கழுவ ஆரம்பித்து, இரு மணிக்கட்டுக்களுக்கு மத்தியில் கோர்த்து கை விரல்களை குடைந்து கழுவி, பின் முழங்கை வரை நீரை செலுத்த வேண்டும். அதே போன்று இடது கைக்கும் செய்ய வேண்டும்







7

தலையை தடவுதல் (மஸ்ஹு செய்தல்) : இரு கைகளையும் நீரில் தொட்டு தலைமுடி ஆரம்பத்திலிருந்து பிடரி வரை கொண்டு செல்ல வேண்டும், மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே கொண்டு வர வேண்டும். இதில் முடியுள்ளவர் வழுக்கையுள்ளவர் என வேறு பாடில்லை.







8 **இரு காதுகளையும் தடவுதல் (மஸ்ஹு செய்தல்) :** தலையை மஸ்ஹு செய்த பின் மீதமான நீர் மூலம் இரு காதுகளையும் மஸ்ஹு செய்தல் வேண்டும். அதன் முறை : இரு ஆட்காட்டி விரல்களையும் இரு காதுகளுக்குள்ளும் நுழைத்து வெளிப்பகுதியை பெருவிரல்களால் தடவிக் கொள்ள வேண்டும். இதன் மூலம் காதுகளின் உட்புறம், வெளிப்புறம் இரண்டையும் மஸ்ஹு செய்வதாக ஆகி விடுகின்றது.

காதுகளுடன் தலையை மஸ்ஹு செய்வது ஒரு முறை மாத்திரமே.









9

**இரு கால்களையும் கழுவுதல் :** விரல் நுனியிலிருந்து கணுக்காலும் பாதமும் இணையும் இடமாகிய கரண்டைக் கால் வரை இரு கால்களையும் கழுவ வேண்டும். கால்விரல்களைக் கோதிக் கழுவுவதுடன், குதிக்கால், மேல்பாதம் என்பவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வலது காலைக் கழுவியது போன்று இடது காலையும் கழுவ வேண்டும்.







10 துஆ மற்றும் திக்ரு : வுழூச் செய்து முடிந்ததும் பின்வரும் துஆவை ஓதுவது ஸுன்னத்தாகும் :

"அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஹ்தஹு லாஷரீகலஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹு" (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணையாளன் இல்லை என்றும், முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் தூதரும் ஆவார்கள் என்றும் உறுதிமொழிகிறேன்).

மேலதிகமாக பின்வரும் துஆவைக் கூறலாம் :

"அல்லாஹும்மஜ்அல்னீ மினத் தவ்வாபீன வஜ்அல்னீ மினல் முததஹ்ஹிரீன்" (இறைவா! என்னை பாவமீட்சி பெறுவோரிலும், தூய்மையானோரிலும் ஆக்கிவிடுவாயாக!).

அல்லது

"ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லா அன்த, அஸ்தஃபிருக வஅதூபு இலைக". (இறைவா! உன்னைப் புகழ்வது கொண்டு உன்னைத் துதிக்கிறேன். உண்மையாக வணங்கப்படத் தகுதியானவன் உன்னைத் தவிர யாருமில்லை என சாட்சி கூறுகின்றேன். உன்னிடமே பாவமன்னிப்புக் கோரி மீள்கின்றேன்).

குறிப்புக்கள் :

1. காதுகளுடன் தலையை ஒரு முறை மாத்திரமே மஸ்ஹு செய்ய வேண்டும். வுழூவின் ஏனைய செயற்பாடுகள் மும்மூன்று தடவைகள் செய்யப்படல் வேண்டும். இதுவே பூரணத்துவமாகும். இரண்டு தடவைகளும் செய்யலாம். ஒரு தடவையும் செய்யலாம், அது கடமையான அளவாகும்.

2. வுழூவின் உறுப்புக்களில் ஒழுங்கு முறை அவசியமாகும். ஒன்றை விட மற்றொன்றை முற்படுத்தலாகாது.

3. அவ்வாறே தொடர்ச்சியாகச் செய்வதும் கடமையாகும். ஓர் உறுப்பு முடிந்து அடுத்த உறுப்பிற்குச் செல்வதற்குள் தாமதம் ஏற்படலாகாது.

## ஜனாபத்திற்காகக் குளிப்பது எவ்வாறு?

ஜனாபத்திற்காகக் குளிப்பதற்கு இரு வடிவங்கள் உள்ளன : கடமையான அளவு, பூரணமான முறை. கடமையான அளவு என்பது பின்வருமாறு :

1. பெருந்தொடக்கை நீக்குவதற்காகக் குளிப்பதாக உள்ளத்தால் நிய்யத் வைத்தல்.
2. வாய்கொப்பளித்து, மூக்கினுள் நீர் செலுத்துவதுடன் முழு உடலையும் நீரினால் நனைத்தல்.

பூரணத்துவம் என்பது குளிப்பின் கடமை, ஸுன்னத் அனைத்தையும் சேர்த்து நிறைவேற்றுவதாகும். அதன் முறை பின்வருமாறு :

1. இரு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவுதல்.
2. அபத்திற்கு நீரூற்றி இடது கையினால் அதனைக் கழுவுதல்.
3. பூரணமாக வுழூச் செய்தல். கால்களைக் கழுவுவதை குளிப்பின் இறுதிவரை பிற்போடலாம்.
4. தலையை மூன்று தடவைகள் கழுவுதல்.
5. ஒரு பெண் தனது முடியை பின்னி வைத்திருந்தால் தலைக்கும், அனைத்து முடிகளுக்கும் நீர் படும் பட்சத்தில் ஜனாபத்து, மாதவிடாய், பிரசவ இரத்தம் என்பவற்றிலிருந்து குளிக்கும் போது அப்பின்னல்களை அவிழ்க்க வேண்டியதில்லை.
6. உடலின் வலது புறம் முழுதையும் கழுவுதல்.
7. பின் இடது புறம் முழுதையும் கழுவுதல்.

## சுத்தத்தின் பிரத்தியேக நிலைகள் :

### தயம்மும் :

ஒரு முஸ்லிம் வுழூச் செய்ய, அல்லது குளிப்பதற்கு இலகுவாக நீர் பெற முடியாவிட்டால் நீருக்குப் பதிலீடுகளை வைத்திருப்பது இஸ்லாத்தின் இலகுபடுத்தல் தோற்றங்களில் உள்ளதாகும். உதாரணமாக, அவர் பிரயாணத்திலிருக்கும் போது குடிப்பதற்கு மாத்திரம் கைவசம் நீர் இருக்க, நீர் விற்பனை செய்யும் யாரும் இல்லாததின் காரணமாகவோ, அதிக விலைக்கு விற்கப்படுவதாலோ நீரை வாங்க முடியாமலிருக்கும் நிலையை எடுத்துக் கொள்ளலாம்.

அல்லது நோய் காரணமாக நீரைப் பயன்படுத்த முடியாமலிருக்க, வுழூச் செய்ய உதவக்கூடிய யாரும் அங்கு இல்லாமலிருத்தல், அல்லது கடும் குளிர் காரணமாக நீரைப் பயன்படுத்தினால் பாதிப்பு ஏற்படலாம் என்ற நிலையையும் எடுத்துக் கொள்ளலாம். இங்கு தூய்மைக்காக மண்ணைப் பயன்படுத்தி தயம்மும் செய்யலாம்.

### தயம்மும் செய்வது எவ்வாறு?

உள்ளத்தால் தயம்மும் செய்வதாக நிய்யத் வைத்து, இரு கைகளாலும் மண்ணில் ஒரு தடவை அடிக்க வேண்டும், பின் அக்கைகளால் முகம், இரு மணிக்கட்டு முழுவதையும் தடவிக் கொள்ள வேண்டும்.

சிறுதொடக்கு, பெருந்தொடக்கு இரண்டிற்கும் தயம்மும் செய்யும் முறை ஒன்றே. தயம்மும் செய்ததும் சுத்தம் நிபந்தனையிடப்படும் அனைத்துவித வணக்கங்களையும் நிறைவேற்றலாம். நீர் கிடைத்தால் அல்லது அதனைப் பயன்படுத்த முடியுமாக இருந்தால் தயம்மும் முறிந்து விடும். சுத்தத்திற்காக நீரைப் பயன்படுத்துவது அவசியமாகும்.











## பாதணி மற்றும் காலுறை (சொக்ஸ்) மீது (மஸ்ஹ் செய்தல்) தண்ணீரால் தடவி விடுதல் :

ஒரு முஸ்லிம் பாதணி அல்லது சொக்ஸ்கள் அணிந்திருந்தால் வுழூச் செய்யும் போது அதனை அகற்ற வேண்டிய அவசியமில்லை. மாறாக கால்களை கழுவும் போது பாதணி அல்லது சொக்ஸின் மேற்பரப்பில் ஈரமான கரங்களினால் மஸ்ஹு செய்து கொள்வது போதுமாகும். இருப்பினும் இரு கால்களையும் கழுவி பரிபூரணமாகச் செய்த வுழூவிற்குப் பின்னால் அவ்விரண்டையும் அணிந்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை இதற்குண்டு. அவ்வாறில்லையாயின் அவ்விரண்டையும் அகற்றுவது அவசியமாகி விடும்.

ஊரிலிருப்பவர் ஒருநாளும், பயணத்திலிருப்பவர் மூன்று நாட்களும் முழுவதுமாக மஸ்ஹு செய்வதைத் தொடரலாம்.

**ஊரிலிருப்பவர் :**

ஒரு நாள் முழுதும் காலுறைகளில் மஸ்ஹு செய்யலாம்.

**பிரயாணி :**

மூன்று நாட்கள் முழுதும் காலுறைகளில் மஸ்ஹு செய்யலாம்.



## பெண்டேஜ்களில் மஸ்ஹு செய்தல் :

உடைவு அல்லது காயங்களுக்குப் போடப்படும் கட்டுக்களே பெண்டேஜ் எனப்படுகின்றது. வுழூவின் உறுப்புகளில் இந்த பெண்டேஜ் கட்டப்பட்டிருந்தால் அதன் தேவை முடியும் வரை வுழூச் செய்யும் போது ஈரமான கைகளால் அதன் மீது மஸ்ஹு செய்யலாம். வுழூச் செய்த பின்னர்தான் அது கட்டப்பட்டிருக்க வேண்டுமென்ற நிபந்தனையில்லை.

அவ்வுறுப்பில் ஒரு பகுதி பெண்டேஜிற்கு வெளியில் இருந்து, அதனைக் கழுவுவதால் பாதிப்பில்லையெனில் அப்பகுதியைக் கழுவிவிட்டு, பெண்டேஜ் உள்ள எஞ்சிய பகுதியின் மீது மஸ்ஹு செய்ய வேண்டும்.

# முடிவுரை :


வுழு, குளிப்பு, தயம்மும் ஆகியன பற்றிய ஏவல்களைக் கூறும் அவ்வசனத்தின் இறுதியில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் :

"அல்லாஹ் உங்களை வருத்தக் கூடிய எந்த சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை - ஆனால் அவன் உங்களைத் தூய்மைப்படுத்தவும்; இன்னும் நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு, தனது அருட்கொடையை உங்கள் மீது முழுமையாக்கவும் விரும்புகிறான்". (அல் மாஇதா : 6)

இதன் கருத்து : தொழுகைக்காக வுழூச் செய்தல், ஜனாபத்திலிருந்து குளித்தல், உரிய காரணங்கள் இருக்கும் போது தயம்மும் செய்தல் ஆகிய உங்கள் மீது அல்லாஹ் கடமையாக்கியதைக் கொண்டு அவன்,

உங்களை வருத்தக் கூடிய எந்த நெருக்கடி, கஷ்டம், சிரமத்தையும் கொடுக்க விரும்பவில்லை. இருப்பினும் அதன் மூலம் உங்களைத் தூய்மைப்படுத்தவே விரும்புகின்றான். அதாவது உள்ரங்க, வெளிரங்க அசுத்தங்களை விட்டும் உங்கள் ஆன்மாக்களை சுத்தப்படுத்தவும், உங்களை ஒட்டிக் கொண்டிருக்கும் பாவங்கள், அழுக்குகளை நீக்கவும் விரும்புகின்றான். அத்துடன் விசுவாசிகளே உங்களுக்கு இலகுவான சட்டங்கள், உயர்ந்த பண்புகள், மகத்தான ஏவல் விலக்கல்கள்களை விதித்துள்ளதன் மூலம் அவனுடைய அருட்கொடைகளை உங்களுக்கு முழுமைப்படுத்தவும், அவனது அருட்கொடைகள், உபகாரங்கள், சட்டதிட்டங்களுக்காக அவனுக்கு நீங்கள் நன்றிசெலுத்துவதையும் விரும்புகின்றான். ஏனெனில் நீங்கள் எப்போது நன்றி செலுத்துகின்றீரோ அப்போது அவனது சிறப்பு, அருட்கொடைகளை உங்களுக்கு அதிகப்படுத்தித் தருவான்.

அல்லாஹ்வே மிக அறிந்தவன், அவன் தனது அடியாரும், நபியுமாகிய முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஸலாதும், ஸலாமும் கூறி, அருள் புரிவானாக!





## மதிப்பீட்டு வினாக்கள் :

**1** (சரி), (பிழை) அடையாளமிடுக :

- [ ] இஸ்லாத்தில் சுத்தமானது உடை, உடல், தொழுமிடம் ஆகியவற்றுடன் சுருங்கிக் கொள்கின்றது.
- [ ] வுழூ ஓர் அடியானின் இரு கண்கள், கை, கால் செய்த பாவங்களை விட்டும் அவனைத் தூய்மைப்படுத்தும்.
- [ ] மாதவிடாய் பெண்ணை விட்டும் நோன்பு தளர்ந்து விடும், தொழுகை தளர மாட்டாது.
- [ ] வாயினுள் நீரைக் கடப்புச் செய்து உமிழ்வதற்குக் கூறப்படும் பெயர் இஸ்தின்ஷாக் ஆகும்.
- [ ] வாய்கொப்பளித்தல், மூக்கினுள் நீர் செலுத்தல் இரண்டையும் ஓரே தண்ணீர் அள்ளின் மூலம் சேர்ப்பது கூடாது.
- [ ] முகம் கழுவும் போது நெற்றியைக் கழுவுவது அவசியமில்லை.
- [ ] வுழூச் செய்பவர் வுழூவின் போது தனது குதிக்காலைக் கழுவ மறப்பது பரவலாக உள்ள தவறுகளில் உள்ளதாகும்.
- [ ] ஜனாபத்துடைய குளிப்பின் கடமையான அமைப்பு வாய் கொப்பளித்து, மூக்கினுள் நீர் செலுத்துவதுடன் முழு உடலையும் நீரினால் நனைப்பதாகும்.
- [ ] தயம்மும் செய்யும் முறையில் சிறு தொடக்கிற்கும், பெருந்தொடக்கிற்கும் இடையில் வேறுபாடுள்ளது.
- [ ] பாதணிகளில் மஸ்ஹு செய்வதன் நிபந்தனைகளுள் ஒன்று அவ்விரண்டையும் வுழூவுடன் அணிந்திருக்க வேண்டும்.
- [ ] தேவை முடியும் வரை பெண்டேஜ்களில் மஸ்ஹு செய்ய முடியும்.

2 தொழுகைக்கு வுழு அவசியமென்பதற்கு ஓர் ஆதாரம் தருக?

.......................................................................................................................

.......................................................................................................................

3 ஒரு முஸ்லிம் மறதியாக வுழுவின்றி தொழுதால் அவனுடைய தொழுகை :

☐ நிறைவேறும் ☐ நிறைவேறாது

4 தெரிவு செய்க :

1. சுத்தம் செய்வது கடமையாகும் நிலைகளில் உள்ளது

☐ நோன்பு ☐ தொழுகை ☐ அல்லாஹ்வை நினைவுகூர்தல்

2. முன், பின் துவராங்களை கல், அல்லது திஷுக்களால் துடைப்பதற்குக் கூறப்படும் பெயர்

☐ இஸ்தின்ஜா ☐ இஸ்திஜ்மார் ☐ இஸ்தின்ஸார்

# மதிப்பீட்டு வினாக்கள் :

**5** வுழூவின் சிறப்புகள் மூன்று கூறுக?

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

**6** பூரணப்படுத்துக :

1. தொழுபவர் தனது தொழுகைக்கு முன் ..................................,........................ ஆகியவற்றிலிருந்து தூய்மையடைய வேண்டும்.

2. இயற்கை தேவைகள் நிறைவேற்றுவதன் சில ஒழுங்குகள்

.................................................................................................................................................

.................................................................................................................................................

3. நாம் வுழூவை ........................................................................ என்ற வார்த்தை மூலம் ஆரம்பித்து முடியுமாயிருந்தால் வாயைச் சுத்தப்படுத்த ...................... ............................................................................................ பயன்படுத்துவோம்.

4. பாதணிகளில் மஸ்ஹு செய்வது ஊரிலிருப்பவருக்கு .................................. நாளும், பிரயாணிக்கு ................................................ நாளும் முடியும்.

**7** இஸ்லாம் வெளிப்படையான தூய்மை, உள்ரங்கமான தூய்மை என இரு வகைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றிற்கும் உதாரணமொன்று தருக?

.................................................................................................................................................

.................................................................................................................................................

8 அசுத்தம் என்றால் என்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

9 இஸ்தின்ஷாக், இஸ்தின்ஸாருக்கிடையில் உள்ள வேறுபாடென்ன?

..........................................................................................................................................

..........................................................................................................................................

10 வுழுவிற்குப் பின் ஓதும் துஆ உமக்குப் பாடமா? அதனைக் கூறவும்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

11 குளிப்பின் பரிபூரணமான ஸுன்னத்தான முறையைக் கூறுக?

..........................................................................................................................................

..........................................................................................................................................

12 வுழுச் செய்ய நீர் கிடைக்கவில்லை, தொழுகை நேரமும் வந்து விட்டது, என்ன செய்ய வேண்டும்?

..........................................................................................................................................

..........................................................................................................................................

# வுழூ மகத்தான அடையாளச் சின்னம்

வுழூ இஸ்லாத்தின் மகத்தான அடையாளச் சின்னங்களில் உள்ளது என்பதையும், பாவங்கள், குற்றங்களை விட்டும் தூய்மையாகும் வழியென்பதையும் எந்தவொரு முஸ்லிமும் அறியாதிருக்க மாட்டான். முஸ்லிம்கள் வுழூவின் அடையாளம் காரணமாக முகம், கைகள் பிரகாசமானவர்களாக எழுப்பப்படுவர். அதனைச் செய்ய முடியுமான ஒரு விசுவாசியின் தொழுகை அதுவன்றி நிறைவேற மாட்டாது. இதனால் ஒரு விசுவாசி கற்கவும், கற்பிக்கவும் அதிக அக்கறை செலுத்த வேண்டிய ஒன்றாக இவ்வுழூ உள்ளது.

இச்சிறு நூலில் சுத்தம், வுழூ, அவற்றை மேற்கொள்ளும் முறை என்பவற்றை முன்வைக்க ஆர்வம் கொண்டுள்ளோம். இச்சிறு நூலுடன் இணைந்திருக்கும் காணொளியினூடாக வுழூச் செய்யும் முறையைக் காணவும் முடியும்.




يجوز

OsoulCenter
www.osoulcenter.com

இஸ்லாத்தைப் பற்றி
பன்மொழிகளில் உரையாடுங்கள்

இஸ்லாத்தைப் பற்றி
மேலும் அறிந்து கொள்ள

வுழூ இஸ்லாத்தின் மகத்தான அடையாளச் சின்னங்களில் உள்ளது என்பதையும், பாவங்கள், குற்றங்களை விட்டும் தூய்மையாகும் வழியென்பதையும் எந்தவொரு முஸ்லிமும் அறியாதிருக்க மாட்டான். முஸ்லிம்கள் வுழூவின் அடையாளம் காரணமாக முகம், கைகள் பிரகாசமானவர்களாக எழுப்பப்படுவர். அதனைச் செய்ய முடியுமான ஒரு விசுவாசியின் தொழுகை அதுவன்றி நிறைவேற மாட்டாது. இதனால் ஒரு விசுவாசி கற்கவும், கற்பிக்கவும் அதிக அக்கறை செலுத்த வேண்டிய ஒன்றாக இவ்வுழூ உள்ளது.

இச்சிறு நூலில் சுத்தம், வுழூ, அவற்றை மேற்கொள்ளும் முறை என்பவற்றை முன்வைக்க ஆர்வம் கொண்டுள்ளோம். இச்சிறு நூலுடன் இணைந்திருக்கும் காணொளியினூடாக வுழூச் செய்யும் முறையைக் காணவும் முடியும்.

ISO 9001

osoulcenter

www.osoulcontent.org.sa

இந்த புத்தகத்தையும் மற்ற புத்தகங்களையும் ஊஸூல் வியாபாரஸ்தலத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய:

OSOUL STORE

osoulstore.com